

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (1.7.2023) கோவில்பட்டி தமிழ்நாடு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் பரமசிவம், துணைத் தலைவர் கோபால்சாமி, சாத்தூர் தமிழ்நாடு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் இலட்சுமணன், துணைத் தலைவர் பெருமாள்சாமி, அகில இந்திய தீப்பெட்டி தொழில் கூட்டமைப்பின் (All India Chamber of Match Industries) தலைவர் நூர் முகமது, குடியாத்தம் தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் மகாலிங்கம் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, தமிழ்நாட்டில் தீப்பெட்டி உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ளோரின் வாழ்வாதாரம் அழிக்கப்படுவதை தடுக்கும் வகையில் பிளாஸ்டிக் சிகரெட் லைட்டர் இறக்குமதிக்கு தடை விதிக்க ஒன்றிய அரசை வலியுறுத்தி தடை ஆணை பெற்றுத் தந்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன் ஆகியோர் உள்ளனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று, சென்னை – அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில், தி.மு.க. சட்டத்துறையின் சார்பில் "முத்தமிழறிஞர் வழக்கறிஞர் பாசறை"யை அதற்கான பதாகையை வெளியிட்டு தொடங்கி வைத்து, வாழ்த்திய காட்சி இது! கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், கழகச் செய்தித் தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி., தலைமைக் கழக சட்ட ஆலோசகர் பி.வில்சன் எம்.பி., கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ்.இரவிச்சந்திரன், துணைச் செயலாளர் ஜெ.பச்சையப்பன், தலைமைக் கழக வழக்கறிஞர் கே.ஜே.சரவணன் ஆகியோர் உடன் உள்ளார்கள்.

### கொளத்தூரில் ரூ.69.78 கோடியில் பல்வேறு திட்டப்பணிகள் முதல்வர் தொடங்கி வைத்தார்!

# திரு.வி.க. நகர் மண்டலத்தில் செங்கை சிவம் பாலம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஜூலை 2–

திரு.வி.க. நகர் மண்டலம், ஸ்டீபன்சன் சாலையில் ரூ.69.78 கோடி செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள "செங்கை சிவம் பாலம்", கொளத்தூரில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கௌதமபுரம் அடுக்குமாடி குடியிருப்பில் முடிவுற்ற திட்டப் பணிகள் உள்ளிட்டவைகள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.7.2023) 69 கோடியே 78 இலட்சத்து 39 ஆயிரம் ரூபாய் செலவில் கொளத்தூர், ஜி.கே.எம். காலனியில் உள்ள அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கௌதமபுரம் அடுக்குமாடி குடியிருப்பில் பூங்கா, நூலகக் கட்டடம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையக் கட்டடங்கள் மற்றும் திரு.வி.க.நகர் மண்டலம், ஸ்டீபன்சன் சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள "செங்கை சிவம் பாலம்" ஆகியவற்றை திறந்து வைத்தார்.

**கூடுதல் வகுப்பறைக் கட்டடங்களை திறந்து வைத்தல்**

கொளத்தூர் தொகுதிக்குட்பட்ட ஜி.கே.எம். காலனி 12வது தெருவில் உள்ள அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி அறக்கட்டளையின் நிதியுதவியுடன் 1 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நவீன வசதிகளுடன் கூடிய 3 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். மேலும், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்களை வழங்கினார்.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கௌதமபுரம் அடுக்குமாடி குடியிருப்பில் முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தல்.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கௌதமபுரம் குடியிருப்பு பகுதி திறந்த வெளி நிலத்தில் கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், 80.69 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள பூங்கா, மாநிலங்களவை உறுப்பினர் என்.ஆர். இளங்கோ அவர்களின் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரமணா நகர், கௌதமபுரத்தில் 40 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பகுதி நேர நூலகக் கட்டடம் மற்றும் 74 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையக் கட்டடங்கள், என மொத்தம் 1 கோடியே 95 இலட்சத்து 39 ஆயிரம் ரூபாய் செலவிலான முடிவுற்ற திட்டப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**ஸ்டீபன்சன் சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள "செங்கை சிவம் பாலம்" திறந்து வைத்தல்**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட திரு.வி.க.நகர் மண்டலம், புளியந்தோப்பு மற்றும் பெரம்பூர் பகுதிகளை இணைக்கும் வகையில், ஸ்டீபன்சன் சாலையில் மூலதன மானிய நிதி மற்றும் இதரத் திட்டங்களின் நிதியின் கீழ், 52.90 கோடி ரூபாய் செலவில் ஓட்டேரி நல்லா கால்வாயின் குறுக்கே பழுதடைந்த பழைய பாலத்தை இடித்துவிட்டு, 282 மீட்டர் நீளம் மற்றும் 22.70 மீட்டர் அகலத்தில் கட்டப்பட்டுள்ள புதிய பாலம், 7.13 கோடி ரூபாய் செலவில் 548 மீட்டர் நீளத்தில் பாலத்திற்கான சாலை மற்றும் அணுகு சாலை, மையத்தடுப்பு, இருபுறமும் நடைபாதை, மையத்தடுப்பில் வண்ணப் பூக்களுக்கான செடிகள் நடுதல் போன்ற பணிகள், 6.8 கோடி ரூபாய் செலவில் மழைநீர் வடிகால் பணிகள் என மொத்தம் 830 மீட்டர் நீளத்தில் 66 கோடியே 83 இலட்சம் ரூபாய் செலவில் இப்புதிய பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

மழைக்காலங்களில் இச்சாலையில் தேங்கும் மழைநீர் வடியும் வண்ணம் குக்ஸ் சாலை சந்திப்பிலிருந்து ஓட்டேரி நல்லா கால்வாய் வரையிலும், புளியந்தோப்பு பகுதியில் தேங்கும் மழைநீர் வடியும் வண்ணம் டாக்டர் அம்பேத்கர் சாலையிலிருந்து ஓட்டேரி நல்லா கால்வாய் வரையிலும் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஸ்டீபன்சன் சாலையில் கட்டப்பட்டுள்ள புதிய பாலத்திற்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செங்கை சிவம் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் "செங்கை சிவம் பாலம்" என்று பெயர் சூட்டி, பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்தப் பாலம் கட்டப்பட்டதன் மூலம், பெரம்பூர், ஓட்டேரி, புளியந்தோப்பு, புரசைவாக்கம் மற்றும் வேப்பேரி பகுதிகளில் உள்ள 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பெரிதும் பயனடைவதோடு, நாள்தோறும் சராசரியாக சுமார்

**70 ஆயிரம் வாகன ஓட்டிகள் பயன்பெறுவர்**

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, இரா. கிரிராஜன், என்.ஆர்.இளங்கோ, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர் மரு. ஜெ. இராதாகிருஷ்ணன், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியின் மேலாண்மை இயக்குநர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் எஸ். கிருஷ்ணன், இயக்குநர் டி.என். நிரஞ்சன் கனி, பொது மேலாளர் டி.ரமேஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (1.7.2023) முகாம் அலுவலகத்தில், காவல்துறை கூடுதல் இயக்குநராக நுண்ணறிவு (முழு கூடுதல் பொறுப்பு) பொறுப்பேற்றுக் கொண்ட டாக்டர் கே.ஏ.செந்தில் வேலன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.


